முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான்
ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1504

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**11.11.2023**, சனிக்கிழமை

1. ஓங்கார ஞான குருவே
ஓங்கார ஞானத்தலைவனே
ஓங்காரக்குடில் படைத்து அருளுகின்ற
ஓங்காரன் என் சொரூபனே
2. என் சொரூபனே உந்தனுக்கு
ஓதிடுவேன் சுப்ரமணியர் யானும்
யானுமே ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 25ம் நாள், 11.11.2023, சனிக்கிழமை)
உரைத்திடுவேன் சோபகிருது துலைத் திங்கள்
3. வகைபட அரங்கன் தேடுகின்ற
வல்லமையான தொண்டர்படைகளை
பேருலகமெல்லாம் ஆறுமுகன் யான் உருவாக்கி
பேருலகமே மெச்சுகின்ற வண்ணம்
4. வண்ணமுடன் உலகமாற்றத்தை
வையகத்தில் அரங்கன் அவதாரத்தில் நடத்தி மகிழ்வேன்
மகிழவே இந்த அற்புதத்தை மகாசக்தியாக
மாதவபலனாக மாதர்ம சூட்சுமமாக மண்ணுலமெங்கும் நிரப்பி வருகின்றேன்
5. வருகவே அரங்கனைத் தேடி
வையகத்தில் இணையும் மக்களெல்லாம்
தர்ம பலத்தின் சக்திகளாகவும்
தவசிகளாகவும் உலகோர் சிறந்து
6. சிறந்துமே அரங்கன் ஆசிபட
சித்திமிகு ஞானவான்களாகவும்
இத்தரையில் அற்புதம் நடத்துகின்ற
எல்லா வரமும் பெற்ற சக்திகளாகவும்

7. ஆகவே உலகோர் மாறி
அற்புதத்தை அரங்கன்வழி நடத்தக்கூடும்
அன்னதனால் அரங்கனுக்கு நித்தம்நித்தம்
ஆறுமுகன் யான் ஆற்றல்கூட்டி வருகின்றேன்
8. வரமென அரங்கன் சக்திகூடி
வையகத்தில் அன்பர்களுக்கு அது வரமாக
தருகின்ற தீட்சை வழி இறங்கி
தரணியில் பேர்அற்புதம் நிகழக்கூடும்
9. கூடவே உலக மாற்றத்துக்கு
குரு அரங்கன் தொண்டே உயர்வாகும்
காலமதில் இதை உலகோர் ஏற்று
கலியுக ஞானி அரங்கன் திருவடிபற்றி
10. பற்றியே உலகோர் ஓங்காரக்குடில்நோக்கி வந்து
பழுதின்றி ஞானம் பயின்றால்
இந்த உலகம் ஞானலோகமாகும்
இந்த உலகுக்கு ஞானஆட்சி உறுதிபட கிட்டும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–